# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, மாச்சு மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 10.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ.(கூட்) 2/2007

**றங்கா கலை நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"றங்கா கலை நிறுவனம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லா குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் பிலியந்தலை, கஹபொல என்னுமிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

றங்கா கலை நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) றங்கா கலை நிறுவனத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "றங்கா கலை நிறுவனம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட

குழுவாதலும் வேண்டும் அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்துவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) எமது பாரம்பரிய கலாசார பொக்கிசமான மேள வாத்திய முரசொலி நுணுக்கத்திறன் மற்றும் நாட்டியம் எதிர்காலப் பரம்பரையினருக்கு உதவியளிக்கும் குறிக்கோளுடன் பல வகையிலும் உதவுதல் ;

(ஆ) கலையார்வம் கொண்டோருக்காக கலைகள் மற்றும் கைவினைகள் பீடமொன்றுக்குச் சமமாக றங்கா கலை நிறுவனத்தை உயர்தரத்துடன் பேணுதல் ;

(இ) பிள்ளைகளுக்கு பாரம்பரிய நடனங்கள், மேள வாத்தியக் கலைகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான பொருட் களை உற்பத்தி செய்வதும், பழுது பார்த்தலும் உட்பட ஐந்து வருடகாலத்திற்கு முழுநேரக் கட்டணம் செலுத்தத் தேவையற்ற கற்கைநெறி ஒன்றை உருவாக்குதல் ;

(ஈ) நடனம் மற்றும் மேள வாத்தியக் கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளித்தல், அதற்கான திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப் படுத்தலும் ;

(உ) நடனம் மற்றும் மேளவாத்தியக் கலைக்கான பாதுகாப்பை ஊக்குவித்தலும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்து தலும் ;

(ஊ) பாரம்பரிய மேள வாத்தியம் மற்றும் நடனம் புதிய வளர்ச்சிப் பாதையினூடே பலப்படுத்தி இப்பாரம்பரிய கலையை இளைஞர் தலைமுறை கவரக்கூடிய முயற்சி ஒன்றாக ஆக்குதல் ;

(எ) இளைஞர் பங்கேற்புடன் பாரம்பரிய கலை முறையைப் பாதுகாக்கக்கூடிய தேசிய அத்துடன் பிராந்திய ரீதியாக நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் ;

(ஏ) நடனம் மற்றும் மேளவாத்தியத்தின் கலையைப் பயிலுவதில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு நாட்டினுள்ளும் வெளியேயும் நடைமுறையிலும் சமய, கலாசார மற்றும் சமூக ரீதியான நடவடிக்கைகளில் ஆகக்கூடிய ஒத்துழைப்பை வழங்குதல் ;

(ஐ) பலவிதமான கலாசார நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பதற்கான சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்குதல், செயல் முறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை ஒழுங்கு செய்தல் ;

(ஒ) வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களைக் கொண்டுவருவதற்கு அவசியமான நிதிப்பலத்தை மாணவர்களுக்கு வழங்குதல் ;

(ஓ) பரம்பரைக் கலைஞர்களின் வாழ்க்கை நிரலை மேம் படுத்தலும், ஓய்வுபெற்ற கலைஞர்களின் பாதுகாப்பு கருத்து விசேட சமூக காப்புறுதி வேலைத் திட்ட மொன்றை அமுல்படுத்துதல், செயற்படுத்தல் ; அத்துடன்

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்கும் முன்னேற்றுவதற்கும் உகந்ததெனக் கூட்டுத்தாபனம் கருதும் புத்தகங்கள், பருவ மஞ்சரிகள், துண்டுப் பிரசுரங்கள், புதினப் பத்திரிகைகள் மற்றும் பருவ மஞ்சரிகளை அச்சிடுதல், வெளியிடுதல், விநி யோகித்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் அலு வல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் கூட்டுத்தாப னத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படக் கூடியவாறான விதிகளுக்கமையவும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவனத்தின் துறைத் தலைவர், நிறுவனத்தின் பிரதித்துறைத் தலைவர், நிறுவனத்தின்

உதவித்துறைத் தலைவர், செயலாளர், பொருளாளர் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவாறான நான்கு உறுப்பினர்களையும் கொண்ட நிருவாக சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிர்வாக சபையானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் ஒழுங்கமைப்பின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையில் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*மதியுரைச் சபை.*

**5**. சபையினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட மதியுரிரைச்சபை ஒன்று இருத்தல் வேண்டும். மதியுரைச் சபையின் உறுப்பினர்கள் சபையின் கூட்டங்களில் பங்குபற்றலாம். அவர்கள் பல்வேறு விடயங்கள் பற்றி மதியுரையை வழங்குவதற்கு உதவமுடியும். ஆனால் அவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

*சொத்துக்களை கொள்ளுதல், நிதிகளை முதலீடு செய்தல், கடனை அதிகரித்தல் முதலியன கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள் ஆதல் வேண்டும்.*

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகளை அல்லது கட்டடிங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்ளுவதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும் நிறுவுவதற்கும் அல்லது வேறு வகையில் பெற்றுக் கொள்ளுவதற்கும் ;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக (வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வேறு நிறுவனங்களிடமிருந்து பணத்தை கடன்பெறுதலும், பணத்தைத் திரட்டுதலும் ; அன்பளிப்புக்களையும், நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளலும் ;

(இ) நாணயமாற்று உண்டியல், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் வேறு கொடுத்துமாற்றுதல், சாதனங்களைத் தயாரிக்கவும், வரையவும், கையேற்க வும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பிடவும் கொடுத்துமாற்றவும் கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், விநியோகிக்கவும், அத்துடன் வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் பேணவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை சபை பொருத்த மெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒரு முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) சந்தாக் கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான கொடைகள் போன்ற வற்றைக் கோரவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளொருவர், ஏதேனுமொரு கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவொன்றுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் ;

(எ) ஏதேனும் காணியை அல்லது ஆளுக்குரிய ஆதனத்தை தாக்குகின்ற ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற் கவும், ஏற்றுக்கொள்ளவும் நிறைவேற்றவும் புரியவும் நிர்வகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமனஞ் செய்யவும், வேலையில் ஈடுபடுத்த வும், பதவி நீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்ய வும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினரைப் பயிற்றுவிக்கவும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தினதும் வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர்களை பதவியிலிருந்து நீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன் சபையின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை என்பன ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஆசிரியர்கள் வெவ்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் மற்றும் அவர்களின் சம்பளக் கொடுப்பனவும் ;

(இ) சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதல், அத்தகைய கூட்டங்களில் வெற்றிடங்களை நிரப்புதல், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதன் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகமைகளும் தகமையீனங்களும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும் முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் ;

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள நிறுவகத்தின் விதிகள் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ் வாதனவாகவிராத வகையில் கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதேபோன்ற ஒரு கூட்டத்தி லும், அதே முறையிலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப்போன்று திருத்தப்படலாம், மாற்றப் படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்பட லாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்ததோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டுமென்பதுடன், நிதியாண்டு அதே ஆண்டின் சனவரி 1 ஆந் தேதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதிவரை இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்காகவும், கூட்டுத்தாபனத்தின் கணக்கா லும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்படைப்பணம், உதவு தொகை, மானியக்கொடை கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் கூட்டுத்தாப னத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு தடவையாது சபையினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கண்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக வும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்கா ளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப் படுகின்றது.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறுவகத்தின் துறைத் தலைவர், செயலாளர் அல்லது சபையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு இரு ஆட்கள் முன்னிலை யிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படு தலாகாது என்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினதும் உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்